www.tamilarangam.net

# அணிசாரா நாடுகளின் அதிபர்களுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்.

**அணிசாரா நாடுகளின் அதிபர்களே !**

மாபெரும் தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்களினால் வகுக்கப்பட்டதும் டிட்டோ, நாசர், சுகர்னோ, துங்குஅப்துல்ரஹ்மான் போன்ற பல்வேறு ஆசிய நாடுகளின் தலைவர்களினால் வளர்க்கப்பட்டதுமான அணிசாராக் கொள்கையையும் அதன் அடிப்படையில் ஒன்று சேர்ந்த நாடுகளின் எண்ணிக்கையும் பல்கிப் பெருகி கிட்டத்தட்ட 100க்கு மேற்பட்ட நாடுகள் புதுடில்லியில் மார்ச் 7-ஆம் தேதிகூட இருக்கும் இந்த நேரத்தில் அணிசாரா நாடுகளின் அதிபர்களுக்கு தமிழ் மக்களின் சார்பில் வாழ்த்தினையும் வரவேற்பினையும் கூறி இந்தப் பகிரங்கக் கடிதத்தைத் தொடங்குகிறேன்.

சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் உலகில் நிரந்தரமான அமைதி நிலவச் செய்யவும் மனித உரிமைகளுக்கு எங்கு அழிவு ஏற்பட்டாலும் அவற்றைத் தடுத்து நிறுத்தவும் ஒன்றுபட்ட முயற்சியை மேற்கொண்டிருக்கும் அணிசாரா நாடுகளின் அதிபர்களின் கவனத்திற்கு இலங்கையில் மனித உரிமைகள் தொடர்ந்து பறிக்கப்படுவதையும் திட்டமிட்ட இனவெறிப் படுகொலைகள் தொடர்ந்து நடத்தப்படுவதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அணிசாரா நாடுகளின் கூட்டத்திற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அழைக்கப்பட்டுள்ளது. ஒரு சுதந்திர நாட்டிற்குரிய அந்தஸ்தோடு அது இம்மாநாட்டில் கலந்துகொள்கிறது. இதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம், இஸ்ரேல் நாட்டில் இராணுவக்கொடுமைகளுக்கு ஆளாகித்தவிக்கும் பாலஸ்தீன அராபிய மக்களுக்கு ஆதரவு காட்டவும், அனுதாபம் தெரிவிக்கவும் முன்வந்துள்ள அணிசாரா நாடுகளின் அதிபர்களை நாங்கள் பாராட்டுகிறோம்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நாங்கள் சுட்டிக் காட்டுவதன் நோக்கம் ஈழ நாட்டின் விடுதலை இயக்கமும் கிட்டத்தட்ட அதே போன்றது என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான். பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் ஈழ நாட்டு விடுதலை இயக்கத்திற்கும் ஏராளமான ஒற்றுமைகள் உள்ளன. அவற்றை நாங்கள் சுட்டிக்காட்டுவதன் மூலம் ஈழ நாட்டு விடுதலை இயக்கத்தைப் பற்றித் தெளிவாக அணிசாரா நாடுகளின் அதிபர்கள் தெரிந்துகொள்ள முடியும் என நம்புகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் ஈழ நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் எண்ணற்ற ஒப்புவமைகள் உள்ளன. "நாடற்ற மக்களுக்கு மக்களற்ற நாடு" என்ற கொள்கையை முன்வைத்து யூதர்களால் பாலஸ்தீனம் அபகரிக்கப்பட்டது. கிட்டத்தட்ட அதே கொள்கையைக் கையாண்டு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம் என ஒன்று இருக்கக் கூடாது, இன ஒற்றுமைக்கு அதுதான் வழி என்று இலங்கையில்உள்ள தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைச் சிங்கள அரசு வேகமாக நடத்தி வருகிறது.

பாலஸ்தீன அரபுகளுக்குச் சொந்தமான நிலங்களை யூதர்கள் திட்டமிட்டு அபகரித்தனர். அராபியர்களின் நிலங்களை யூத தேசிய நிதியிலிருந்து அதிகப் பணம் கொடுத்து வாங்கினார்கள். போர் நடத்தி பாலஸ்தீனர்களை வெளியேற்றிவிட்டு நிலத்தினை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். யூதக் குடியேற்றத்தினால் சுற்றிவளைத்து அரபுகளைத் தாக்கி பயமுறுத்தி அவர்களாகவே நிலத்தைவிட்டு ஓட வைத்தார்கள். சட்ட விரோதக் குடியேற்றத்தின் மூலம் ஏராளமான பாசன வசதியுள்ள மேற்குக் கரை நிலங்கள் யாவும் யூதர்களால் அபகரிக்கப்பட்டது.

அராபியர்களை விரட்டிவிட்டு காசாவிலும், மேற்கு கரைப் பகுதியிலும் ஏராளமான இராணுவக் குடியேற்றங்களை உருவாக்கியுள்ளார்கள். இஸ்ரேல் உருவாகு முன்னர் பாலஸ்தீனத்தில் நடந்த குடியேற்றத்தினால் பெருகிய யூத மக்கள் தொகையின் விவரம்:-

1900 — 24,000
1919 — 57,000
1922 — 83,730
1931 — 1,74,000
1948 — 5,90,000

கிட்டத்தட்ட இதைப் போலவே இலங்கையில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சிங்களவர்கள் அபகரித்தார்கள். ஈழ நாட்டுத் தமிழ் மக்களின் நிலங்கள் சிங்கள அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன. சிங்கள இராணுவத்தின் கொடுமைகளினால் உள்ளூர் தமிழர்கள் அவர்களாகவே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கிச் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தினார்கள். திரிகோணமலைப் பகுதியில் சிங்கள



குடியேற்றவாசிகள் அங்கு வாழ்கிற தமிழர்களைப் பயமுறுத்தி நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு விரட்டியடித்தனர். இதன் காரணமாக இலங்கையில் வளம் நிறைந்த மூன்று போக வசதியுள்ளதும் தமிழர்களுக்குச் சொந்தமானதுமா ஏராளமான நிலம் சிங்களர்களால் அபகரிக்கப்பட்டது. தமிழ் ஈழத்தின் வடக்கு - கிழக்குப் பகுதிகள் எங்கும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஈழ நாட்டில் திரிகோணமலைப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தினால் பெருகிய சிங்கள மக்கள் தொகை விவரம் :-

1921 — 1,499
1946 — 15,706
1961 — 39,950
1971 — 55,309
1981 — 86,304

இவ்வாறே அம்பாரைப் பகுதியில் 1946-ல் 4.5% ஆக இருந்த சிங்கள மக்களின் சதவிகிதம் தற்போது 37.7% ஆக உயர்ந்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் 8,000 சதுர மைல் கொண்ட தமிழ்ப் பகுதி நிலத்தில் கிட்டத்தட்ட 3,000 சதுர மைல்கள் சிங்களக் குடியேற்றத்தால் அபகரிக்கப்பட்டன.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனியப் பகுதிகளில் வாழும் அராபியர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகள் மற்றும் பாரபட்சங்களைப் போல் இலங்கையில் சிங்களவர் மிகுதியாக வாழும் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் இழைக்கப்பட்டன.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் வாழும் அராபியர்களுக்கான கல்வித் திட்டம் வேறாக மாற்றி அமைக்கப்பட்டு கல்வித்தரம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இலங்கையிலும் மலையகத் தமிழர்களுக்குத் தனியாகக் கல்வித் திட்டம் அமுல் நடத்தப்பட்டு கல்வித்தரம் குறைக்கப்பட்டது. 10 வயது வரைதான் தமிழ் மாணவர்களுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறது. 5-வது வகுப்புக்குமேல்அவர்களுக்கு படிக்க வசதியில்லை. இந்த அறைகுறைக் கல்விகூட 2.5 இலட்சம் மலையகத் தமிழ்ச் சிறுவர்களுக்கு மறுக்கப்பட்டது.

பாலஸ்தீனத்தில் காசா பகுதியிலும் மேற்குக் கரைகளிலும் 1967-க்கு முன்னர் இருந்த கட்டாயக் கல்வித் திட்டம் ஆக்கிரமிப்புக்கு பின்னர் அமுல் நடத்தப்படவில்லை. இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருக்கும் கட்டாயக் கல்வித் திட்டம் மலையகத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமுல் நடத்தப்படவில்லை. தனியார் பாடசாலை தொடங்கப்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. 1963-ஆம் ஆண்டில் இலங்கையில் உள்ள எல்லா பாடசாலைகளையும் கல்லூரிகளையும் தேசியமயமாக்கிய இலங்கை அரசு மலையகத் தமிழர்களுக்காக நடத்தப்படும் கல்விச்சாலைகளைத் தேசியமயமாக்க மறுத்தது.

ஆக்கிரமிப்பாளர்களின் தொல்லைகளினாலும் கல்விக்கான வசதி இன்மையினாலும் ஆரம்பக் கல்வி கற்கும் அரபு மாணவர்களின் விகிதம் வெகுவாகக் குறைந்தது. பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலும் காசாவிலும் ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்களின் விகிதம் 1967 — 68-ல் 3.2 சத விகிதமாகவும் 1974 — 75.ல் 2 7 சதவிகிதமாகவும் குறைந்தது. இலங்கையில் மலையகத்தில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் தொகை 5.4 சதவிகிதமாகக் குறைந்தது. கல்வி கற்கும் வயதிலுள்ள மொத்தம் 3 இலட்சம் தமிழ்ச் சிறுவர்களில் 79,000 சிறுவர்கள் மட்டுமே கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனத்தில் சுகாதார வசதிகள் அறவே செய்யப்படாததால் அரேபிய குழந்தைகளின் இறப்பு 8 சத விகிதமாக உள்ளது. இலங்கை மலையகத்தில் வாழும் தமிழர்களின் குழந்தைகளின் இறப்பு 10 சத விகிதமாக உள்ளது. இது உலகில் மிக அதிக அளவாகும். போதுமான சத்துணவு இல்லாததினால் இவ்வாறு சாவு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இலங்கை முழுவதிலும் வயதானவர்கள் இறக்கும் விகிதாசாரம் 34.7 சதவிகிதமாகும். ஆனால் மலையகத் தமிழகத்தில் இது 62.4 சதவிகிதமாக இருக்கிறது

இப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் வருவாயில் 76% உணவுக்காகவே செலவிடுகின்றனர். இந்த அளவுக்குக் குறைந்த வருவாய் உள்ள மக்களுக்குச் சம்பள உயர்வு தர இலங்கை அரசு தொடர்ந்து மறுத்துவருகிறது.

1947-ல் பாலஸ்தீனிய அராபியர்கள் யூத இன வெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி காசா மற்றும் மேற்குப் பகுதியில் குடிபெயர்ந்தனர். 1967-ஆம் ஆண்டுப் போரின்போது அங்கிருந்தும் விரட்டப்பட்டு சிரியா போன்ற நாடுகளுக்கு இடம் பெயர்ந்து அகதிகள் முகாம்களில் வாழ்ந்துவருகின்றனர். அங்கும் அவர்களால் நிம்மதியாக வாழ முடியவில்லை. அதைப் போலவே, இலங்கையில்



1958-லும் 1977, 1981 ஆகிய ஆண்டுகளிலும் தமிழர்களின் மீது சிங்கள இன வெறியர்கள் தாக்குதலைத் தொடுத்தனர். இந்த இனக் கலவரங்களின் விளைவாக ஏராளமான தமிழர்கள் பலியாகி, சொத்து சுகங்களை இழந்து அகதிகளாக வட பகுதிகளில் குடியேறினார்கள். அங்கும் நிலம் கொடுக்க மறுத்து சிங்கள அரசு அவர்களை விரட்டியடித்துவருகிறது.

அராபிய மக்களை அடிமைப்படுத்தி வைத்துக்கொண்டு அதே நேரத்தில் அவர்களுக்கு முழு உரிமை கொடுத்திருப்பதாக வெளி உலகத்திற்குக் காட்டுவதற்காக சுயாட்சி என்ற வாக்குறுதியினைக் கூறி ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தேர்தலை யூதர்கள் நடத்தியபோதிலும் அரபு மக்கள் உறுதியாக நின்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கு ஆதரவானவர்களையே தேர்ந்தெடுத்தார்கள். அதைப் போலவே இலங்கையிலும் தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்திவரும் சிங்கள அரசு தமிழ்ப்பகுதிகளை வளர்ச்சியடையச் செய்கிறோம் என்ற போலி வாக்குறுதிகளை அள்ளி வீசிய போதிலும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், மாவட்ட சபையின் தேர்தல்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதிநிதிகளையே தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்தனர்.

1948-ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற புதிய நாடு பிறந்தபோது சுமார் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட அராபியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. கிட்டத்தட்ட அதே காலத்தில் இலங்கை சுதந்திர நாடானபோது 10 இலட்சம் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

தற்போதுள்ள 35 இலட்சம் பாலஸ்தீனியர்களில் 5 இலட்சம் பேர் இஸ்ரேலில் வசிக்கிறார்கள். மற்றவர்கள் பல்வேறு நாடுகளில் அகதிகளாகச் சிதறிக்கிடக்கிறார்கள். ஜோர்டான் ஆற்றின் மேற்குக் கரையில் சுமார் 7 இலட்சம் பேர் வசிக்கிறார்கள். பாலஸ்தீனிய அகதிகளில் பெரும்பாலோர் ஜோர்டான் நாட்டில் வாழ்கிறார்கள். ஜோர்டான் மக்கள் தொகையில் பாதிக்கு மேலானவர்கள் பாலஸ்தீன் அகதிகளே. காசா பகுதியில் சுமார் 4 இலட்சம் பேரும், லெபனானில் 3,50,000 பேரும், சிரியாவில் 1,75, 000 பேரும், குவைத் நாட்டில் 1,45,000 பேரும் வாழ்கிறார்கள். மற்றும் சௌதி அரேபியா, லிபியா, எகிப்து ஆகிய நாடுகளிலும் ஏராளமான பாலஸ்தீனிய அகதிகள் இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலஸ்தீனிய அகதிகளைப் போலவே ஈழத் தமிழர்கள் பலரும் பிறந்த மண்ணில் வாழ முடியாமல் தவிக்கிறார்கள் இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களில் சுமார் 5 இலட்சம் பேர் இந்தியாவிற்கு விரட்டப்பட்டு அகதிகளாக அங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மற்றும் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களும். ஈழ மாணவர்களும் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். மலேசியாவை சுமார் 30,000 ஈழத் தமிழர்கள் புகலிடமாகக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டனில் ஏறத்தாழ 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமித் தமிழர்கள் வாழ்கிறார்கள், மற்றும் ஜெர்மனியில் 5 ஆயிரம் பேரும், பிரான்சில் 2,000 பேர்களும் மற்ற ஐரோப்பிய நாடுகள் பலவற்றுள்ளும் பல ஆயிரம் பேர்களும் சிதறிக் கிடக்கிறார்கள். அரேபிய நாடுகள் எல்லாவற்றிலும் வேலை தேடித் தவிக்கும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது.

பாலஸ்தீன அராபிய அகதிகளுக்கு ஐக்கியநாடுகள் சபை உதவி செய்கிறது. அந்த உதவியைப் பெற்று அவர்கள் வாழ முடிகிறது. ஆனால் இலங்கையிலீருந்து விரட்டியடிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் எந்த நாட்டின் உதவியும் இல்லாமல் மிகவும் அவலமான வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## தமிழர்களுக்கு வஞ்சனை

பொருளாதாரத் துறையிலும், தொழிற் துறையிலும் விவசாயத் துறையிலும் ஈழநாட்டுத் தமிழர்கள் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்தால் அதிர்ச்சி அடைவீர்கள், உலகில் எந்த ஒரு நாட்டிலும் தேசியச் சிறுபான்மையினராக உள்ள மக்கள் இவ்வாறு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றை நீங்கள் பார்த்திருக்க முடியாது.

இலங்கையில் தமிழர்கள் வசிக்கும் பகுதிகள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுவதையும், தமிழர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதையும் ஆதாரப்பூர்வமாக தங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் அணிசாரா நாடுகளின் அதிபர்களே! இந்த அநீதியைத் தடுக்க உங்களாலானதை நீங்கள் நிச்சயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் அந்த விபரங்களைக் கீழே தருகிறேன்.



இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறை என்பது எவ்வளவு கேலிக் கூத்தாக இருக்கிறதென்பதையும், இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் படிப்படியாக குறைக்கப்பட்ட வரலாற்றையும் அரசாங்கப் பதவிகளிலும், இலங்கையின் இராணுவம் போலீஸ் ஆகியவற்றில் தமிழர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் கல்வித் துறையில் தமிழர்கள் தொடர்ந்து ஒதுக்கப்படுவதையும் உங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு அங்கு வாழும் 35 இலட்சம் தமிழ் மக்கள் எவ்வாறெல்லாம் ஒடுக்கப்பட்டனர் என்பதையும் வஞ்சிக்கப்பட்டனர் என்பதையும் இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றனர் என்பதையும் கீழ்க்கண்ட விபரங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டும்.

## பாராளுமன்ற கேலிக்கூத்து

பிரிட்டிஷாரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஆட்சி முறை என்பது தமிழரைப் பொருத்தவரை கேலிக்கூத்தாகவே அமைந்துவிட்டது. சோல்பரி அரசியல் சட்டப்படி நாடாளுமன்றத்தில் மொத்தமிருந்த 95 இடங்களில் தமிழருக்கு 37 இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால் நடைமுறையில் 9 இடங்கள் குறைக்கப்பட்டன. 1947-ல் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் 28 தமிழர்கள்தான் நாடாளுமன்றத்திற்குச் செல்ல முடிந்தது. மலையகத் தமிழர்களுக்காக ஒதுக்கப்பட்ட 14 தொகுதிகளில் 7 தமிழரே உறுப்பினராக வர முடிந்தது. மற்றும் உள்ள 7 தொகுதியில் சிங்களப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அத்தொகுதிகளில் சிங்கள மக்களே அதிகமிருக்குமாறு பிரிக்கப்பட்டதே காரணமாகும். சட்டப்படி 37 இடம் தமிழர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் அது 28 ஆக இருந்தது. அதிலும் திருப்தியடையாத சிங்களவர் தமிழ்ப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மேலும் குறைக்கும் முயற்சியில் இறங்கினார்கள்.

முதலில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்க பிரஜா உரிமைச் சட்டம் என்ற பெயரில் ஓர் புதிய சட்டம் கொணர்ந்து மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தனர், இதன் விளைவாக 1952-ல் நடைபெற்ற பொதுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேர்தலில் தமிழர் தொகுதிகளில் மேலும் 7 குறைந்தன. சுமார் 200 ஆண்டு காலத்திற்கு மேலாக உழைத்து இலங்கையில் வளம் கொழிக்கும் ரப்பர், தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி அந்நாட்டின் பொருளாதாரத்தைச் செழிக்க வைத்த தமிழ்த் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த கொடுமைக்கு ஈடான கொடுமை வேறு எந்த நாட்டிலும் நடைபெறவில்லை.

தமிழர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 37 தொகுதிகளில் 14 தொகுதிகளைப் பிரித்துச் சிங்களவரிடம் கொடுக்க புதிய சட்டம் வழி வகுத்தது. அடுத்த சட்டமாக தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களைத் தொடர்ந்து ஏற்படுத்திப் பாரம்பரியமாக தமிழர் பகுதியிலிருந்த இடங்களில் சிங்களப் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்தனர். 1960-ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் இரண்டு தடவைகளிலும் தொகுதிகளைத் திருத்தி அமைப்பதாகக் கூறி தொகுதிகளை நிர்ணயம் செய்ததால் தமிழர்கள் பிரதிநிதித்துவம் மேலும் குறைந்தது. இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் தொடக்கத்தில் 39% என நிர்ணயிக்கப்பட்டு படிப்படியாக குறைந்து இப்போது 16% ஆக உள்ளது.

கீழ்க்கண்ட பட்டியல் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் எவ்வாறு குறைக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கும்:

| | மொத்த தொகுதிகள் | சிங்கள இன தொகுதிகள் | தமிழினத்திற்கான தொகுதிகள் | தமிழனுக்கு உள்ள பிரதிநிதித்துவ |
|---|---|---|---|---|
| சோல்பரி அரசியல் அமைப்பின்மூலம் இனரீதியாகப் பெறக்கூடியதாக இருந்தபிரதிநிதித்துவம் | 95 | 58 | 37 | 39% |
| முதலாவது பாராளுமன்றதேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் (1947-ல்) | 95 | 70 | 25 | 26.3% |
| மலையகத்தமிழர் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் பின்னர் 1952-ல் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் | 95 | 74 | 19 | 20% |
| தொகுதிஎண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதால் 1970-ல் | 151 | 124 | 27 | 17.8% |
| இரண்டாவதுதடவை தொகுதி எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதன் பின் 1977-ல் | 168 | 137 | 31 | 18% |
| ஜெயவர்த்தனவின் புதிய அரசியல்அமைப்பின் தேர்தல்முறைப்படி அடுத்துவரும் தேர்தலில் | 196 | 163 | 33 | 16% |



ஜெயவர்த்தனவின்புதிய அரசியலமைப்பின்படி அடுத்து நடைபெறவிருக்கும் தேர்தலில் மாகாணத்துக்கு 4 என்ற அடிப்படையில் அதிகரிக்கப்பட வேண்டிய 28 தொகுதிகளில் 2 தொகுதிகளை மட்டுமே தமிழ்ப்பகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

## பொருளாதாரப் புறக்கணிப்பு

வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, பிரதேச வளர்ச்சி போன்றவற்றில் தமிழ்ப் பகுதிகள் சிங்கள ஆட்சியினரால் அறவே புறக்கணிக்கப்படுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள தொழில் உற்பத்தி வளங்களும் பொருளாதார வழங்களும் அபகரிக்கப்படுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது சிங்கள வெறியர்களால் இனவெறித் தாக்குதல் நடத்தப்பட்டு தமிழ் மக்களின் பொருளாதார மையங்களான கடைகள், தொழில் நிலையங்கள் சூறையாடப்படுகின்றன.

### வேலைவாய்ப்பு :

நாட்டின் மக்கள் தொகையில் 25.2 வீதமாக இருக்கும் தமிழர்களுக்கு அரசினால் வழங்கப்படும் வேலைவாய்ப்பில் 7 சதவிகிதம் கூட வழங்கப்படவில்லை. பதவி உயர்விலும் தமிழர் புறக்கணிக்கப்படுகிறது. தற்போதைய ஜெயவர்த்தன ஆட்சியில் வேலை வாய்ப்புக்களில் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப் படுகிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட புள்ளிவிபரங்கள் விளக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அலுவலர் நியமனம்

| பதவி | மொத்த நியமனம் | சிங்கள வர்கள் | தமிழர் கள் | தமிழர் களுக்கு கிடைத்த சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1977-80 | | | | |
| ஆசிரியர்கள் | 25,081 | 22,399 | 2682 | 10.7% |
| இலங்கை நிர்வாகிகள் | 144 | 144 | ... | ... |
| மொழி பெயர்ப்பாளர்கள் | 5 | 5 | ... | ... |
| தபால் அதிபர்கள் சமிக்ஞையாளர்கள் | 46 | 44 | 2 | 4.5% |
| அரசாங்க சேவை எழுது வினைஞர்கள் | 3,326 | 3,127 | 199 | 5.9% |
| தட்டெழுத்தாளர் | 414 | 376 | 38 | 9.2% |
| சுருக்கெழுத்தாளர் | 198 | 135 | 63 | 31.8% |
| புக் கீப்பர்ஸ் | 183 | 172 | 11 | 6.1% |
| இரயில்வேத்துறை அதிகாரிகள் | 195 | 181 | 14 | 7.2% |
| இரயில்வே எழுது வினைஞர்கள் | 214 | 209 | 5 | 2.3% |
| இரயில்வே பாதுகாவலர்கள் | 83 | 82 | 1 | 1.2% |
| திருமலை அரசாங்க அலுவலக அலுவலர்கள் | 20 | 16 | 4 | 15.0% |
| பார்மசிஸ்டுகளும் ரேடியோ கிராபர்கள் | 480 | 473 | 7 | 1.4% |
| 1977 - 80 வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் | 2643 | 2417 | 226 | 8.5% |
| திட்ட அமுலாக்கல் அமைச்சரின் அனுமதியுடன் 'பிரிமாமா ஆலை ஊழியர்கள் | 451 | 379 | 72 | 19.2% |



## பதவி உயர்வு

| | மொத்தப் பதவி உயர்வு | சிங்களவர் | தமிழர் | தமிழர்கள் பெற்ற பதவி உயர்வு விகிதம் |
|---|---|---|---|---|
| கல்விச்சேவை 3-ஆம் தரம் | 53 | 45 | 8 | 15.3% |
| 1981-ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை | 34 | 27 | 7 | 20.5% |
| போலீஸ் சார்ஜண்ட் | 43 | 40 | 3 | 7% |

## சேவையில் உள்ளோர்

| துறை | மொத்தம் | சிங்களவர் | தமிழர் | தமிழர்கள் பதவியில் உள்ள வீதம் |
|---|---|---|---|---|
| போலீஸ் | 17,000 | 16,050 | 940 | 5% |
| தரைப்படை | 10,000 | 9,780 | 220 | 2.2% |
| கடற்படை | 2,170 | 2,024 | 146 | 6.7% |
| ஆசிரியர்கள் | 1,36,714 | 1,13,264 | 23,450 | 17.1% |

தொழில் வளர்ச்சியில் தமிழ்ப் பகுதிகள் முற்றிலுமாகப் புறக் கணிக்கப்பட்டு வருகின்றன. நாட்டிலுள்ள பெரிய தொழிற்சாலை களில் தமிழ்ப் பகுதிகளில் 3 தான் இருக்கின்றன. அந்த மூன்று ஆலைகள்கூட நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னர் திட்டமிட்ட ஏற்பாட்டின்படித்தான் அமைக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின் புதிதாக அமைக்கப்பட்ட 200க்கும் அதிகமான தொழிற்சாலைகளில் ஒன்றுகூட தமிழ்ப் பகுதிகளில் அமைக்கப்படவில்லை. தமிழ்ப் பகுதி களில் தொழிற்சாலைகள் தொடங்க முன்வரும் தனியாருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. திருகோணமலையில் பிரீமாமா ஆலை மட்டும் சிங்களவர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஜப்பானுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உருவாகிவரு கிறது. இருக்கின்ற 3 தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சிமெண்ட் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை என்பவற்றின் உயர் பதவிகளில் எல்லாம் சிங்களவர்களை நியமித்து, சிற்றூழியர்களாகக்கூட சிங்களவர்களே சேர்க்கப்படுகிறார்கள். அதனால் தமிழ்ப் பகுதி மக்களின் வேலை வாய்ப்பைச் சிங்களவர்கள் அபகரிப்பதுடன் புதிய சிங்களக் குடியேற்றமும் ஏற்பட்டு தமிழ் நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன.

தமிழ்ப் பகுதிகளில் இருக்கும் தொழிற்சாலைகளையும் சிங்களப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் முயற்சி நடைபெறுகிறது. இரசாயனத் தொழிற்சாலைக்கு வேண்டிய கச்சாப் பொருட்கள் அதிகமாக விளைகின்ற பகுதியிலுள்ள பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை மூடிவிட்டு சிங்களப் பகுதிக்கு அந்த தொழிற்சாலையைக் கொண்டு செல்லும் முயற்சியில் அரசு இறங்கி யிருக்கிறது. அத்துடன் சிமெண்டுக்கான பிரதான மூலப் பொருளான சுண்ணாம்புக் கல் அதிகமாக இருக்கும் காங்கேசன்துறையில் உள்ள சிமெண்ட் ஆலையை விஸ்தரிக்காது அங்கிருந்து சுண்ணாம்புக் கற்களை 270 மைல் தொலைவில் உள்ள சிங்களப் பகுதியான காலிற்கு எடுத்துச் சென்று அங்கு ஒரு பெரிய சிமெண்ட் தொழிற்சாலையை அமைத்து இயக்கிவருகிறார்கள். இதனால் தமிழ்ப் பகுதியின் மூலவளங்கள் சுரண்டப்படுவதுடன் இந்த மூல வளங்களால் கிடைக்கும் வேலை வாய்ப்பையும் தமிழ் மக்கள் இழக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதியில் கிழக்குக் கரையோரமான புல்மோட்டைப் பகுதியில் தாராளமாகக் கிடைக்கும் இல்மனைட் கனிவளம் சுரண்டப்பட்டு ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுபோலவே, நாட்டில் மிகச் சிறந்த உப்பளமாகத் திகழும் ஆனைஇறவு உப்பளத்தை அபிவிருத்தி செய்வதை விடுத்து சிங்களப் பகுதியான அம்பாந் தோட்டையில் சிங்கள அரசு ஒரு உப்பளத்தை அமைத்துவருகிறது.

துணுக்காய் என்னும் தமிழ்ப் பகுதியில் அமைக்கும்படி நிபுணர்களால் பரிந்துரை செய்யப்பட்ட சீனத் தொழிற்சாலை சிங்களக் குடியேற்றப் பகுதியான கல்ஓயாவில் நிர்மாணிக்கப்பட்டது.

பல உலக வல்லுநர்களால் பருத்திப் பயிருக்குச் சிறந்த இடம் என எடுத்துக் கூறப்பட்ட பூநகரிப் பகுதியைப் புறக்கணித்துவிட்டு சிங்களப் பகுதியில் பருத்திப் பயிர் செய்யத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.



எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் விவசாயிகள் எந்தப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்களோ அதே விளைபொருள்களை சிங்கள அரசு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தமிழ் விவசாயிகளை நட்டமடையச் செய்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்து நார்வே நாட்டு உதவியுடன் தமிழ்ப்பகுதியான காரை நகரில் செயற்படுத்தப்பட்டு வரும் சீனோ மீன்பிடி வளர்ச்சித் திட்டத்தையும் சிங்களப் பகுதிக்கு மாற்ற சிங்கள அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழ்ப் பகுதியிலுள்ள முக்கிய மீன்பிடி மையங்களில் உள்ள மீன் வளங்கள் சிங்கள மீனவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுச் சுரண்டப்படுகின்றது. முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஏராளமான சிங்கள மீனவர்கள் வந்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். தமிழ்ப் பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி வசதிகளைச் செய்து கொடுக்க மறுத்து வரும் இலங்கை அரசு சிங்கள மீனவர்களுக்கு மீன்பிடி வளங்களையும் வலைகளையும் கடனாக வழங்கி அவர்களைத் தமிழ்ப் பகுதிகளில் மீன்பிடிக்க ஊக்கமளிக்கிறது. ஆரம்பத்தில் மீன்பிடிக்கும் காலங்களின் மட்டும் வந்து சென்ற சிங்கள மீனவர்கள் 15,000 பேர் தற்போது அங்கேயே நிரந்தரமாகக் குடியேறி விட்டனர்.

## கல்வியில் புறக்கணிப்பு

1978-ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தாய் மொழியில் கல்விக்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இலங்கை அரசு மலைத் தோட்டப் பகுதியில் தமிழ் மாணவர்களுக்கு பள்ளிக்கூட வசதிகளைச் செய்து தராததால் இலங்கையில் உள்ள தமிழ் மாணவர்களில் கால் பகுதியினர் ஆரம்பக் கல்வி பெறும் வாய்ப்பினை இழந்து விட்டனர். நாட்டின் இன விகிதாசாரத்தில் 25.2 வீதம் தமிழர்கள் இருக்கிறார்கள். ஆனால் கல்வி கற்கும் தமிழ் மாணவர்களின் விகிதாசாரம் 19.86 ஆகவே இருக்கிறது, மலையகத்தில் சுமார் 2.25 இலட்சம் தமிழ்ச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியைக்கூட கற்க முடியாமல் இருக்கிறார்கள்.

கல்விக்கூடம் செல்லும் குறைந்த விகித தமிழ் மாணவர்களுக்காவது சிங்கள மாணவர்களுக்குக் கிடைப்பது போல கல்வி வசதிகள் செய்யப்படுகின்றதா என்றால் இல்லை. கல்விக் கூட வசதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியர்கள் நியமனம் இவற்றில் போதிய ஒதுக்கீடு செய்யாமல் தமிழ் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. 23.2 சிங்கள மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் இருக்கையில் 27.4 தமிழ் மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலேயே தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் நியமனத்தில் கூட எவ்வாறு பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை கீழ்க்கண்ட அட்டவணை விளக்கும்.

| | | |
|---|---|---|
| 74% சிங்கள மக்களுக்கு | 82.9% | ஆசிரியர்கள் |
| 25.2 தமிழ் மக்களுக்கு | 17.1% | ஆசிரியர்கள் |
| 26,29,177 சிங்கள மாணவருக்கு | 113264 சிங்கள | ஆசிரியர்கள் |
| 6,51,610 தமிழ் மாணவருக்கு | 23,450 தமிழ் | ஆசிரியர்கள் |

தற்போதைய ஜெயவர்த்தன அரசு ஆட்சிக்கு வந்ததும் 25,081 ஆசிரியர்களை நியமித்தது. அதில் சிங்கள ஆசிரியர்கள் 22,399 அதாவது 89% ஆனல் தமிழ் ஆசிரியர்கள் 2,682 அதாவது 11% மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இன விகிதாசாரத்தின்படி இன்னும் 4000 தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல் தமிழ் மாணவர்கள் இந்த 4000 ஆசிரியர்களைப் பெறும் வாய்ப்பை இழந்துவிட்டார்கள்.

மாணவர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் வழங்குவதாகக் கூறி சிங்கள மாணவர்களுக்கு மட்டும் புத்தகங்கள் வழங்கப்பட்டு தமிழ் மாணவர்களுக்கு வழங்காமல் அவர்களுக்கு இடையூறு விளை வித்துவருகின்றனர்.

மேலும் 1970-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறிமுகப்படுத்தப் பட்ட இனவாரித் தரப்படுத்துதல் முறையினுல் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் வீதத்தை கீழே கண்ட அட்டவணை விளக்கும்.

| பாடம் | பயிற்சி மொழி | 1969 | 1970 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|---|---|
| மருத்துவம் | சிங்கள மொழி | 50% | 57% | 58.6% | 62% | 72.7% |
| | தமிழ் மொழி | 50% | 43% | 41.4% | 32% | 27.3% |
| | | 1977 | 1978 | 1979 | 1981 | |
| | சிங்கள மொழி | 72% | 57.5% | 67.4% | 80.7% | |
| | தமிழ் மொழி | 28% | 42.5% | 32.6% | 19.3% | |



| பொறியியல் | 1969 | 1970 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|---|
| சிங்கள மொழி | 51.7% | 56% | 64.7% | 73.4% | 81.5% |
| தமிழ் மொழி | 48.3% | 44% | 33.3% | 26.6% | 18.5% |
| | 1977 | 1978 | 1979 | 1981 | |
| சிங்கள மொழி | 81% | 64% | 61.8% | 69.8% | |
| தமிழ் மொழி | 19% | 36% | 38.2% | 30.2% | |

## பாலஸ்தீனமும் — தமிழீழமும்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சுருக்கமான வரலாற்றைத் தங்கள் பார்வைக்கு வைப்பதன் மூலமும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு அணிசாரா நாடுகளும் ஐக்கியநாடுகள் சபையும் தொடர்ந்து அளித்து வருகிற ஆதரவை சுட்டிக்காட்டுவதன் மூலமும் பாலஸ்தீன அராபியர்களைப்போலவே தங்களின் உரிமைகளுக்காகப் போராடும் ஈழ நாட்டு தமிழர்கள் பற்றிய ஒரு முழுமையான கணிப்பினை தர முடியும் என்ற நம்பிக்கையில் அவற்றைக் கீழே தருகிறோம்.

1917-ஆம் ஆண்டில் (பல்போர் BALFOUR) பிரகடனத்தின் மூலம் யூதர்களுக்காக பாலஸ்தீனத்தில் ஒரு தாயகத்தை உருவாக்கிக் கொள்ள உதவுவதாக பிரிட்டன் வாக்குறுதி கொடுத்தது. இதைக் தொடர்ந்து பாலஸ்தீனப் பிரச்சினையும் முளைத்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்த பின்னர் இப்பிரச்னை வலுக்கத் தொடங்கிற்று. ஹிட்லரின் கொடுமைகளுக்கு ஆளான யூதர்கள் மீது உலக அனுதாபம் இருந்தது. இதையொட்டி ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீனத்தின் எதிர்காலம் பற்றிய விவாதம் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோதே 1948-ஆம் ஆண்டு மே மாதம் 14-ஆம் தேதி இஸ்ரேல் என்ற தனி நாட்டை யூதர்கள் பிரகடனம் செய்தனர்.

பாலஸ்தீன மக்களது சுதந்திர போராட்டத்தின் முதல் கட்டம் 1920ம் ஆண்டில் தொடங்கிற்று. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிடியில் இருந்து விடுதலைப் பெறவேண்டுமென்று போராடிய பாலஸ்தீனிய அராபியர்களுக்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஆதரவு தெரிவித்தார்கள். 1937-38ம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் பாலஸ்தீனிய விடுதலை போராட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீரர்கள்மீது கட்டவிழத்துவிட்ட அடக்குமுறை அட்டூழியங்களையும் பாலஸ்தீனிய மக்கள் மீது குண்டு வீசி தாக்கியதையும் எதிர்த்து இந்தியா போன்ற நாடுகளில் தேசிய இயக்கங்கள் குரல் எழுப்பின.

1928ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் மகாநாடு கல்கத்தாவில் நடைபெற்றபோது கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தியாவின் சுதந்திர போராட்டத்திற்கு ஒரு பெரும் அபாயமாக விளங்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இரும்புப் பிடியில் இருந்து தங்களை விடுவித்துக்கொள்ளப் போராடியதனால் பாலஸ்தீனிய அராபியர்களுக்கு இந்தியா முழு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்தது. 1937ம் ஆண்டு நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டில் பாலஸ்தீன பிரிவினையை ஏற்றுக்கொள்ளும்படி அரபுகளை நிர்ப்பந்திக்கும் நோக்கத்தோடு ஏகாதிபத்திய வாதிகள் செய்து வந்த சூழ்ச்சிகளை கண்டித்து அகில இந்திய மாணவர் சம்மேளனம், இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் ஆகியவையும் பி. எல். ஓ. க்கு நிதி திரட்டியனுப்பின.

**''பாலஸ்தீன நாடு அரபு நாடு. அரபு நலன்களே அங்கு மேலோங்கி நிற்க வேண்டுமென'' ஜவஹர்லால்நேரு தெரிவித்தார்.**

**எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் இந்தியாவின் தந்தை காந்தியடிகள் ''யூதர்கள்பால் தமக்கு அனுதாபம் இருந்த போதிலும்'' அந்த அனுதாபம் நீதியைக் காணாதபடி தம் கண்களை மறைந்துவிட வில்லையெனவும், பாலஸ்தீனம் அராபியர்களுக்கு சொந்தம் எனவும் யூதர்களைத் திணிப்பது தவறு எனவும் எழுதினார்.**

இஸ்ரேல் 1948ம் ஆண்டு யுத்தத்திற்குப் பிறகு ஆக்கிரமித்துக்கொண்ட எல்லா பகுதிகளிலிருந்தும் வெளியேற வேண்டுமென்று திட்டவட்டமாகக்கூறி வந்திருப்பதாகவும், இஸ்ரேல் இந்தத் தகறாரை மேலும் மேலும் வளர்ந்து வருகிறது எனவும் இந்திய அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறி தன் கடும் தண்டனத்தை தெரிவித்திருக்கிறது. இந்தியா சுதந்திரத்திற்கு முன்னேயும், பின்னேயும் அராபியர்கள் பக்கமே இருந்து வந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஐ. நா. விலும் கொண்டுவரப்பட்ட முக்கிய தீர்மானங்கள் அனைத்திற்கும் இந்தியா ஆதரவாகவே இருந்துள்ளது. பி. எல். ஓ. வை பாலஸ்தீன மக்களின் ஏகப்பிரதிநிதியாக அங்கீகரித்து 1974ம்



ஆண்டில் ஐ. நா. வில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. 1980ம் ஆண்டு மார்ச் 23-25ம் தேதிகளில் புது டெல்லியில் நடைபெற்ற ஆசியாவின் சமாதானம் பந்தோபஸ்துக்கான சர்வதேச மகாநாடு பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தது. பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இஸ்ரேலும் மற்ற ஏகாதிபத்திய அரசுகளும் செய்துவரும் சூழ்ச்சிகளை இம்மகாநாடு வன்மையாகக் கண்டித்து, ஐ. நா. தீர்மானங்களின்படி தமது தாயகத்திற்கு திரும்புவதற்கும், முழு அரசு உரிமை படைத்த தமது சொந்த சுதந்திர அரசை அமைத்துக் கொள்வதற்குமான உரிமை உட்பட தமது தேசிய உரிமைகளுக்காக போராடி வரும் மக்களுக்கு இந்த சர்வதேச மகாநாடு பேராதரவு தெரிவித்தது. இதைத் தொடர்ந்து பாலஸ்தீனத்தைச் சுற்றியுள்ள அரேபிய நாடுகள் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

## பி. எல். ஓ. வரலாறு

அராபிய மக்களின் உயிரைப் பாதுகாக்கவும் இனக் கொடுமைகளைப் புரியும் யூதர்களை எதிர்த்துப் போராடவும் பல்வேறு புரட்சி இயக்கங்கள் முளைத்தன. 1964ம் ஆண்டில் இந்த இயக்கங்கள் அத்தனையும் ஒருங்கிணைந்து பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி. எல். ஓ.) பிறந்தது. 1969ம் ஆண்டில் அல்பதா (ALFATHA) என்ற பாலஸ்தீன புரட்சி இயக்கத்தின் தலைவரான யாசர் அராபத் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் சேர்ந்து அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். எகிப்து நாட்டில் கொரில்லாப் போர் பயிற்சிகளைக் கற்றுத் தேர்ந்த அவர் தலைமையின் கீழ் பாலஸ்தீன விடுதலை இயக்கம் புதிய வடிவத்தினைப் பெற்றது,

பாலஸ்தீன விடுதலை இயக்கம் உலக நாடுகளின் ஆதரவையும் பெறத் தொடங்கிற்று. 1972ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மொரொக்கோவின் தலைநகரான ராபத் என்னும் இடத்தில் கூடிய 18 அரேபிய அதிபர்கள், பாலஸ்தீனியர்களின் தலைவராக அராபத்தைஅங்கீகரித்தார்கள். அதே மாதத்தில் எகிப்து, சவுதிஅரேபியா. சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் பேரவையில் பாலஸ்தீனியர்களின் பிரச்னைப் பற்றி பேசுகிற வாய்ப்பினை அராபத் பெற்றார். இது வரலாறு காணாத நிகழ்ச்சி ஆகும். உலக நாடுகளின் தலைமையகமான ஐ. நா. வில் ஒரு புரட்சி இயக்கத்தின் தலைவர் பேச அழைக்கப்பட்டது. இதுவே முதல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தடவையாகும். வணக்கத்திற்குரிய போப்பாண்டவர் மட்டுமே அங்கு பேசுவதற்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஐ. நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளைத் தவிர வேறு யாரும் அங்கு பேசுவதற்கு அதுவரை அழைக்கப்பட்டதே இல்லை. முதன்முறையாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தில் தலைவரான அராபத் அங்கு பேசுவதற்கு அழைக்கப்பட்டதன் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரத்தை உலக நாடுகள் அரங்கில் அராபத் பெற்றார். இதனை தொடர்ந்து பல்வேறு நாடுகளும் இராஜதந்திர உறவுகளுடன் பாலஸ்தீனிய இயக்கம் ஏற்படுத்திக்கொண்டது. 1981ம் ஆண்டு அக்டோபர் மாதம் சோவியத் நாடு அராபத்தை அன்புடன் வரவேற்றது. இதனைத் தொடர்ந்து மாஸ்கோவிலுள்ள பாலஸ்தீனிய விடுதலை இயக்க அலுவலகத்திற்கு ஒரு சுதந்திர நாட்டின் தூதரகத்திற்குள்ள மதிப்பு அளிக்கப்பட்டது. அடுத்ததாக சீனாவும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்ததோடு அதற்கு இராணுவ உதவி அளிக்கவும் வாக்கு கொடுத்தது.

1981ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அராபத் இந்தியாவிற்கு வருகை தந்தார். அவருக்கு அரசும் மக்களும் மகத்தான வரவேற்பு அளித்தனர். பிரதமர் இந்திராவும், அராபத்தும் கூட்டறிக்கை வெளியிட்டனர். பி. எல். ஓ. இயக்கத்திற்கு இந்தியா அங்கீகாரம் அளித்தது. இதைத்தொடர்ந்து ஆஸ்தீரியா, ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகள் அங்கீகாரம் அளித்தன. ஏறத்தாழ 100 மேற்பட்ட நாடுகள் பி. எல். ஓ.வை அங்கீகரித்துள்ளன. ஐ. நா. சபையில் பி. எல். ஓ. அங்கீகரிப்பதற்கான தீர்மானத்திற்கு ஆதரவாக 105 வாக்குகளும், எதிராக 4 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன. உலக நாடுகளில் எந்த அளவிற்கு பி. எல். ஓ. வை ஆதரிக்கின்றன என்பதை இது தெளிவாகக் காட்டுகின்றது. 1976ம் ஆண்டு ஜனவரியில் மேற்கு ஆசியா பற்றி ஐ. நா. பாதுகாப்பு குழுவின் விவாதங்களில் கலந்துகொள்ள பி. எல். ஓ. அழைக்கப்பட்டது. ஐ. நா.வில் உறுப்பினராக இல்லாத ஒரு அமைப்பு பாதுகாப்புக் குழு கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டது. இதுவே முதல் தடவையாகும். 1976ம் ஆண்டு ஆகஸ்டில் கொழும்பில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் உச்சகட்ட மாநாட்டில் 'பி. எல். ஓ. முழு அங்கீகாரம் படைத்த ஒரு நாடாகக் கலந்து கொண்டன.



1920-ஆம் ஆண்டு தொடங்கி 1987-ஆம் ஆண்டுவரை பாலஸ்தீனிய அரேபியர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தங்களுடைய நாடும் இதர அணிசேரா நாடுகளும் தொடர்ந்து அளித்துவந்திருக்கிற ஆதரவு சுதந்திரத்திலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்டவர்களுக்குத் தெம்பூட்டுவதாக அமைந்திருக்கிறது.

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தை அணிசாரா நாடுகள் அங்கீகரித்திருப்பதும் அந்த இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர் யாசர் அராபத் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருப்பதும், எங்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

பாலஸ்தீனிய அரேபிய மக்களைப் போல தங்களுடைய உரிமை காக்கப் போராடும் தமிழீழ மக்களுக்கு, உங்களுடைய நல்லாதரவை அளிக்க முன்வர வேண்டுமென்று, உலகமெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் சார்பில் வேண்டிக்கொள்கிறேன்.

பாலஸ்தீன விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலை இயக்கமும், உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு மக்களால் நடத்தப்படுவனவாயினும் அடிப்படையில் இரண்டும் ஒன்றேயாகும். கொடூரமான சர்வாதிகார ஆட்சிகளின் பிடிப்பிலிருந்து விடுபட்டு சுதந்திரக் காற்றை சுவாசிக்க பாலஸ்தீனிய அரேபியர்களும், தமிழீழத் தமிழர்களும் துடிதுடிக்கிருர்கள்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு கைகொடுத்து அவர்களைக் கரையேற்றத் துணைபுரியும் உங்களின் ஜனநாயகக் கரங்கள், தமிழீழ விடுதலை இயக்கத்தின்பாலும் நீளட்டும்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு உறுதுணையாக நிற்கும் அணிசாரா நாடுகளின் அதிபர்கள் தங்களுக்கும் நிச்சயமாக உதவுவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் தமிழீழத் தமிழர்கள் உங்களை எதிர்நோக்கி இருக்கிருர்கள். அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவ வேண்டியது உங்களின் தலையாய கடமை என்று மிக்க பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிரேம்.

30 ஆண்டு காலத்திற்கு மேலாக எவ்வளவோ சோதனைகளுக்கும் கொடுமைகளுக்கும் நடுவே 35 லட்சம் ஈழத் தமிழர்கள் கொஞ்சமும் மனவுறுதி குன்ருமல், செய் அல்லது செத்து மடி என தொடர்ந்து போராடி வருகிருர்கள். தங்களது விடுதலை வேட்கையை உலகறியச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்துவிட்டார்கள். இனி அவர்களுக்கு வேறு நாதி இல்லை. அணிசாரா நாடுகள் அவர்களுக்கு உதவ முன்வராவிட்டால் அவர்கள் கதி அதோகதிதான்.

அழிவின் விளிம்பில் நின்று போராடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு உடனடியாக உதவ முன்வரும்படியும் — அவர்களின் பிரச்னையை அணிசாரா நாடுகளின் கூட்டத்தில் எழுப்பவும்—ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தை இப்பிரச்னையில் திருப்பவும், தேவையான நடவடிக்கைகளைத் தாங்கள் எடுப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பாலஸ்தீனிய விடுதலைப் பிரச்னையில் உலக நாடுகளில் பெரும்பாலானவை ஆரம்ப காலத்தில் பாராமுகமாக இருந்தன. அகதிகள் முகாம்களில் இருந்தவர்களுக்கு உதவ மட்டுமே முன் வந்தன. அவர்களது போராட்டத்திற்கு ஆதரவோ அங்கீகாரமோ அளிக்கத் தவறின. காலம் கடந்துதான் உலகில் பல்வேறு நாடுகள் பாலஸ்தீனிய விடுதலைப் பிரச்னையில் கவனம் செலுத்தின. ஆரம்பத்தில் இந்த அங்கீகாரத்தை உலகம் கொடுத்திருந்தால் பாலஸ்தீன மக்கள் இவ்வளவு கொடுமைகளுக்கு ஆளாகி இருக்கமாட்டார்கள். அதைப் போலவே இலங்கையில் சிங்கள இராணுவத்தின் கொடுமைகளுக்கும் ஆளாகி உறுதியாக நின்று தமிழ் ஈழ விடுதலைக்காகப் போராடும் ஈழத் தமிழ் மக்களுக்குத் தற்போதுதான் உலக நாடுகளின் அனுதாபம் கிடைக்கத் தொடங்கி யிருக்கிறது. இந்த அனுதாபம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக உருவெடுத்தால் அராபியர்கள் கொடுமைகளுக்கு ஆளானதைப்போன்று ஈழத் தமிழர்கள் ஆளாகாமல் இருப்பார்கள். பாலஸ்தீனப் பிரச்னை முற்றி உலக நெருக்கடியாக உருவெடுத்துள்ளது போன்ற நிலைமை ஈழ நாட்டுப் பிரச்னையிலும் ஏற்படாமல் தடுக்க வேண்டிய கடமை அணிசாரா நாடுகளின் அதிபர்களுக்குண்டு.

அணிசாரா நாடுகளின் மாநாட்டில் 100 நாடுகள் கலந்து கொள்கின்றன. 18 நாடுகள் பார்வையாளர்களாகவும், 24 நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாகவும் கலந்து கொள்கின்றன.

சுதந்திர நாடுகள் மட்டுமல்ல, சுதந்திரத்திற்காகப் போராடும் இயக்கங்களான பாலஸ்தீன விடுதலை இயக்கமும், தென்மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கமும், சுதந்திர நாடுகளுக்குரிய முழு அந்தஸ்துடன் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



அதைப்போலவே ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், அகில ஆப்பிரிக்க காங்கிரஸ் ஆகிய அமைப்புகள் இம்மாநாட்டில் முழு உரிமையுள்ள பிரதிநிதிகளாக அழைக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்துள்ளன. ஏற்கனவே இந்த 2 இயக்கங்களுக்கும் பார்வையாளர்கள் அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது. ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸுக்கு உறுப்பினர் உரிமை வழங்குவதை சோவியத் நாடும், இந்தியாவும் பலமாக ஆதரிக்கின்றன.

எனவே அணிசாரா நாடுகள் அதிபர்களுக்கு இந்த வேலையில் பணிவன்புடன் நாங்கள் தெரிவித்துக்கொள்கிற வேண்டுகோள் ஒன்றுதான். பாலஸ்தீன விடுதலை இயக்கம், தென் மேற்கு ஆப்பிரிக்க மக்கள் இயக்கம், ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ், அகில ஆப்பிரிக்க காங்கிரஸ், பியூரிடோரிகோ நாட்டின் சோஷலிஸ்ட் கட்சி, இஸ்லாமிய மாநாடு போன்ற விடுதலை போராட்ட இயக்கங்களை அங்கீகரித்து அவற்றை முழு உரிமை பெற்ற உறுப்பினர்களாகவோ அல்லது பார்வையாளர்களாகவோ டெல்லி மாநாட்டிற்கு அழைத்து இருப்பதன் மூலம் அந்த நாடுகளில் வாழும் மக்களின் விடுதலை உணர்வுகளுக்கு நீங்கள் மதிப்பு அளித்திருக்கிறீர்கள். அந்த நாட்டு மக்களை அடக்கி ஆளும் ஏகாதிபத்தியங்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறீர்கள். இந்த விடுதலை இயக்கங்களுக்கு எந்தவிதத்திலும் குறைவு இல்லாத வகையில் தங்களுடைய விடுதலைக்காக போராடிவரும் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளையும் டெல்லி மாநாட்டிற்கு அழைக்க வேண்டுமென்று தங்களை வற்புறுத்த விரும்புகின்றோம்.

இன்னொன்றும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். ஐக்கிய நாடு சபையின் சுதந்திர சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகளை வலியுறுத்துகிற ஒரு அமைப்பாக திகழும் அணிசாரா நாடுகளின் அமைப்பில் ஸ்ரீலங்கா அரசின் பிரதிநிதிகள் இடம் பெற்று இருப்பது எல்லா வகையிலும் பொறுத்தமற்றதாகும். ஸ்ரீலங்கா அரசு இன வெறி மிகுந்த அரசு. மைனாரிட்டி மக்களாக வாழும் தமிழர்களைப் படுகொலை செய்யும் அரசு. சுருக்கமாகச் சொன்னால் சர்வதேச ஜூரிகளின் சபை (International Council of Jurists) ஸ்ரீலங்கா அரசை பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''தென்னாப்பிரிக்காவிலுள்ள கறுப்பின மக்களுக்கு எதிரான சட்டத்தைவிட மிகக் கடுமையான பயங்கரமான தடுப்புச் சட்டத்தை ஸ்ரீலங்கா அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது'' என்று சர்வ தேச ஜூரிகள் சபை கூறியுள்ளது.

இராணுவத்தையும், போலீஸ் படையையும் கொண்டு ஸ்ரீலங்காவில் வாழும் தமிழ் மக்களைக் கொன்று குவித்துவருகிறது. இன வெறியர்கள் தூண்டுதலின் மூலம் அப்பாவி மக்களின் மீது ஆயுதம் தாங்கியவர்களை ஏவி பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். நூற்றுக் கணக்கானோர் சிறை பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். பல தமிழர்கள் எந்த விசாரணையுமின்றி சிறையில் சித்திரவதைப்பட்டு வருகிறார்கள். பலர் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நாடாளுமன்றத்திலேயே பயமுறுத்தலுக்கு ஆளானார். எதிர்க்கட்சித் தலைவரின் மீது நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சியினரால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்த கேலிக்கூத்து நடந்தது.

இந்தக் கொடுமைகளைக் கண்டு இந்திய மக்கள் அனைவரும் பெரும் கவலை அடைந்து இருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஸ்ரீலங்கா அரசின் கொடுமைகளுக்கு எதிரான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களைக் காப்பாற்றும் தீர்மானம் ஒன்றும் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தியாவின் தென்கோடியில் உள்ள தமிழ்நாடு ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்தது இந்தப் பிரச்னையில் இந்தியாவில் உள்ள தமிழர்கள் கவனம் செலுத்துவது நியாயமானது என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறோம். எனவே இப்பிரச்னையில் முழு பரிமாணத்தையும் அணிசாரா நாடுகள் அனைத்தும் அறிந்துகொள்வதற்கு வகைசெய்யும் வகையில் தமிழீழப் பிரதிநிதிகளுக்கும் அணிசாரா மாநாட்டில் இடம் அளிக்க வேண்டுகிறோம். குறைந்த கால அவகாசமே இருப்பதனால் முழு உரிமையுள்ள பிரதிநிதியாக அழைக்க முடியாவிட்டாலும் பார்வையாளராகவாவது கலந்துகொள்ளும் உரிமையை தமிழீழப் பிரதிநிதிகளுக்கு அளிக்க வேண்டுமென உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

உண்மையுள்ள,

(ப. நெடுமாறன்)

---

விவேகாநந்தா அச்சகம், மதுரை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Rayut 627-4508

Sathiyan 743-9657

Sambul (O) 094-1-85143


85143

1) India

2) Kumar

3) Mani — Rayu

4) Kirupa ← Sathiyan (after 9 PM)



விலை ரூ. 1—00

வெளியீடு :

**தமிழ்நாடு காங்கிரஸ் (கா)**

**1, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி**

**சென்னை-2.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்